**அ.வ.எண்: 15/2021** **நாள்: 17.07.2025**

வா.சா.1 - நாகராஜ்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

1. 22.05.2014ம் தேதிய 1, 4 பிரதிவாதிகள் தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1800/2014ம் எண்ணாக ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (மேற்படி ஆவணத்தில் வா.சா.1 தரப்பினராக இல்லை என்பதால் 4ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

2. 07.11.2014ம் தேதிய 1ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4152/2014ம் எண்ணாக ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 5ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட 10(1) பட்டா கணிணி நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 1, 4 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்ட 10(1) பட்டா கணிணி நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட 10(1) பட்டா கணிணி நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 26.08.2019ம் தேதிய வாதி, 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு உண்மை நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 17.09.2019ம் மேற்படி அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

(4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

(2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் யாரும் ஆஜராகவில்லை.)